# நிதியியல் கல்வியறிவு வழிகாட்டி




**இந்திய ரிசர்வ் வங்கி**

ஊரகத் திட்டம் மற்றும் நிதிக்கடன் துறை

மத்திய அலுவலகம், மும்பை

ஜனவரி 2013

# நிதியியல் கல்வியறிவு முகாம்களை
# நடத்தும்
# பயிற்சியாளருக்கான வழிகாட்டி

**(இந்திய ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கை எண். RPCD.FLC.No.12452/12.01.018/2011-12 நாள் ஜூன் 06, 2012 படி வெளியிடப்பட்டது)**

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் விதிமுறைகளின்படி நாடு முழுவதும் உள்ள ஊரக வங்கிக் கிளைகள் மற்றும் நிதியியல் கல்வியறிவு மையங்கள் மாத இடைவெளியில் நடத்தும் நிதியியல் கல்வியறிவு முகாம்களில் பயன்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அலுவலகம், ஊரகத் திட்டம் மற்றும் நிதிக்கடன் துறையால் இந்தக் கையேட்டிலுள்ள பொருளடக்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்த நிதியியல் குறிப்பேடு இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்திலும் www.rbi.org.in உள்ளது.

தொகுப்பு : சுஷ்மா விஜ் & கீதா நாயர்
வரைபடங்கள் : ஆ ர். என். ரஹாதே
தமிழாக்கம் : இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை

முதல் பதிப்பு – ஜனவரி 2013

**வெளியீடு**
**இந்திய ரிசர்வ் வங்கி**
ஊரகத் திட்டம் மற்றும் நிதிக்கடன் துறை
10வது தளம், மத்திய அலுவலகம், சஹித் பகத்சிங் சாலை
கோட்டை, மும்பை – 400001.

**தனிப்பிரசுர உரிமை**
மூலத்தொகுப்பு அங்கீகரிக்கப்படின், மறுபதிப்பு அனுமதிக்கப்படும்.

**ஒப்புகை**

இந்த உரைக்கு தேவையான விவரங்கள், ஏசியன் இந்தியா, பெண்களுக்கான இந்திய நுண் நிதி பள்ளி, பரிணாமம் அறக்கட்டளை மற்றும் சன்சயான் குழுமம் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# முன்னுரை

நிதியியல் கல்வியானது பொதுமக்களுக்கு கிடைக்கும் நிதியியல் பொருட்கள் மற்றும் சேவைகளை பற்றி விளக்கி கூறி, அதன் மூலம் வங்கிகள் கொடுக்கும் நிதியியல் பொருட்கள் மற்றம் சேவைகளுக்கான தேவைகளை பெருக்கி, நிதியியல் சேர்க்கையின் வேகத்தை முடுக்கிவிடுகிறது. சமுதாயத்தில் அனைத்து தரப்பினர்களுக்கும், நிதியியல் கல்வி ஏதோ ஒரு வகையில் தேவைப்படுகிறது. இருப்பினும், நமது சமுதாயத்தின் ஒரு மிகப்பெரிய பிரிவு, நிதியியல் சேர்க்கையில் இருந்து விடுபட்டு இருப்பதால், நமது நிதியியல் கல்வியானது, தனது சொந்த பணத்தேவைகளை சரிவரப்புரிந்து கொள்ளாத, மிக எளிதில் பணப்பற்றாக்குறைக்கு ஆளாகக் கூடிய தனி மனிதர்களை மனதில் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.

நான் நிதியியல் சேர்க்கைகாக கிராமங்களுக்கு சென்ற போது, அங்குள்ள மக்களை சென்றடையக் கூடிய ஒரு பொதுவான அடிப்படை பாடத்திட்டம் இல்லாததே, நிதியியல் கல்வி வெற்றிகரமாக செயல்பட ஒரு பெரும் சவாலாக உள்ளது என்பதை உணர்ந்தேன். இந்த வழிக்காட்டியானது, அந்த குறிப்பிட்ட மக்களை சென்றடையும் தகவல்கள் சீராகவும் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களிடம், வங்கி சேவைகளுக்கான தேவைகள் அதிகரிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். கிராமப்புற வங்கிகளின் வங்கி மேலாளர்களும், மற்றும் முன்னோடி வங்கி மேலாளர்களும் இந்த வழி காட்டியை, மாதாந்திர நிதியியல் கல்வி முகாம்களில் பயன் படுத்த வேண்டும்.

சில தேவையான மாற்றங்களுடன், இந்த வழிகாட்டியை, நிதியியல் சேர்க்கைக்கு உட்படாத நகர்ப்புற மக்களிடமும் பயன்படுத்தலாம். வங்கிகள், நிதியியல் கல்வியை பரப்பவும், அதே நேரம் வாடிக்கையாளர்களுக்கு எளிதாகவும், நியாயமான விலையிலும் வங்கி சேவைகளை வழங்கவும் தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். நமது நிதியியல் சேர்க்கை முறைகளை, நீடிக்கதக்கதாகவும், விரிவாக்கக் கூடியதாகவும், லாபம் ஈட்டக் கூடிய வாய்ப்புள்ளதாக தரம் உயர்த்தி, அதன்மூலம் நாம் வறுமையிலிருந்து நிதி ஆதிக்கம் அடையவும், அதே சமயம் வங்கிகள் லாபமுடன் செயல்பட கூடியதாகவும் உறுதி செய்ய வேண்டிய தக்க தருணம் இதுதான்.

**(க.ச. சக்ரபர்த்தி)**
துணை ஆளுநர்

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருளடக்கம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | நிதியியல் கல்வி – பயிற்றுவிப்பாளர்களுக்கான வழிகாட்டி குறிப்புகள் | I - II |
| 2. | நிதியியல் கல்வியறிவு முகாம்கள் நடத்தும் வழிமுறைகள் | III - V |
| 3. | உங்களது நிதியை நிர்வகித்தல் | 1-6 |
| 4. | சேமிப்புகள் | 7 - 9 |
| 5. | வங்கிகளில் சேமித்தல் | 10 -16 |
| 6. | கடன்கள் | 17 - 18 |
| 7. | வங்கிகளிலிருந்து பெறும் கடன்கள் | 19-22 |


Printe

# நிதியியல் கல்வி - பயிற்றுவிப்பாளர்களுக்கான வழிகாட்டி குறிப்புகள்

1. நிதியியல் சேர்க்கைக்கான இரண்டு முக்கிய விஷயங்களாகிய, நிதியியல் அறிவு மற்றும், நிதியியல் சேவைகளை எளிதாக பெறுதல் என்ற இந்த இரண்டையும் அளிப்பதே நிதியியல் முகாம்களின் முக்கிய நோக்கமாகும். நிதியியல் திட்டமிடுதல், சேமிக்கும் பழக்கம், மற்றும் நிதியியல் பொருட்களை புரிந்து கொண்டு அதன் மூலம் நிதியியல் சேவைகளை பெறுவது போன்றவற்றை பற்றிய விளக்கங்களை பொதுமக்களுக்குச் சொல்வதே இதன் நோக்கமாகும். வாழ்க்கைச் சக்கரத்தின் தேவைகளுக்காக முன்கூட்டியே திட்டமிடவும், எதிர்பாராத அவசர தேவைகளை கடன் இன்றி சமாளிக்கவும் இது வழிகாட்ட வேண்டும். அவர்கள் முன் எச்சரிக்கையுடன் பணத்தைக் கையாண்டு, கடன் வலையிலிருந்து மீண்டு வருமாறு செய்தல் வேண்டும். பொதுமக்கள் நிதியியல் அறிவுடன், நிதியியல் சேவைகளை எளிதாக பெற வழி செய்து, அதன்மூலம் தன் நிதி நிலைகளை கட்டுக்குள் வைத்திருக்கும் வகையில் அவர்களுக்கு நிதியியல் கல்வியை கொடுப்பதன் மூலம், அவர்கள் வங்கிச் சேவைகளை பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். வங்கிச் சேவைகளின் துணை கொண்டு அவர்களின் பொருளாதாரப் பாதுகாப்பை மேம்படச் செய்திட வேண்டும்.

2. நிதியியல் சேவைகளை கொடுக்கும் வங்கிகளுக்கு நிதியியல் சேர்க்கை மற்றும் நிதியியல் கல்வியறிவை பரப்புவதன் மூலம், இது வரை யாரும் பெற்றிடாத வர்த்தக வாய்ப்புகளை வங்கிகள் பெறும். வாழ்க்கை மட்டத்தின் கீழ்ப்படியிலுள்ள சிறிய வாடிக்கையாளர்களை பயன்படுத்தி, வங்கிகள், வர்த்தக வாய்ப்பினை பெருக்கி கொள்ள வேண்டும். அதனால் வங்கிகள் இந்த நிதியியல் கல்வி முயற்சிகளை தனது வருங்காலத்திற்கான முதலீடாக கருத வேண்டும். வங்கிகள் சிறிய அளவிலான வைப்புக்கு மேல் கடன், மாறக்கூடிய தொடர் வைப்பு கணக்கு, விவசாயக் கடன் அட்டை, பணப்பறிமாற்றம் போன்ற தொகுப்புச் சேவைகளை வழங்கி, அதன் மூலம் கணக்குகளை செயல்படக் கூடியதாகச் செய்தல் வேண்டும். பொதுமக்களை, இந்த கணக்குகளை உபயோகிக்க ஊக்குவிப்பதன் மூலம் வங்கிகள், இம்மாதிரியான கணக்குகளை பராமரிக்கும் செலவுகளை ஈடுகட்டி, லாபம் பெற ஏதுவாகும். போதுமான அளவு கடன் கொடுப்பதன் மூலம் பயன் அடைவது, பொதுமக்கள் மட்டும் இன்றி, வங்கிகளும் கூடுதலான வட்டியின் மூலம் வருமானத்தை அதிகரித்து வணிக நோக்கில் செயல்பட ஏதுவாக்கும். வங்கிகள் அதிக வட்டி இல்லாமல், அதே சமயம் குறைந்த வட்டியும் இல்லாமல் தகுந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க வேண்டும்.

3. பல்வேறு நிதியியல் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதை அவர்கள் வீட்டு வாசல்படியிலேயே கொடுப்பதும் தான் வங்கி கணக்குகள் சேர்ப்பதின் முதற்படியாகும். சாமான்ய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்களுக்கு

பணத்தை நிர்வகிப்பது, சேமிப்பின் பயன்கள், வங்கிகள் கொடுக்கும் பிற சேவைகள், வங்கிகளில் கடன் வாங்குவதின் பலன்கள், ஆகியவற்றை எளிய முறையில் விளக்கி கூறுவதுமே இந்த நிதியியல் கல்வியின் முக்கிய குறிக்கோள் ஆகும். நிதியியல் கல்வி மற்றும் நிதியியல் சேர்க்கை பயிற்றுவிப்பாளருக்கு இது, ஒரு ஆயத்த வழிகாட்டியாகும். மாதாந்திர நிதியியல் கல்வி முகாம்களில், நிதியியலில் இருந்து விலக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழிகாட்ட இதை ஒரு நிலைப்படுத்திய உரைக் கோவையாக பயன்படுத்த வேண்டும். வங்கி சேவையில் இருந்து விடுபட்ட மக்களை வங்கி சேவைகளுக்குள் கொண்டு வரும் முயற்சியாக, முகாம்கள் மூலமாக கணக்குகளை தொடங்குவதும், தொடங்கிய கணக்குகளை தொடர்ந்து கண்காணிப்பதையும் ஒரு செயல் திட்டமாக மேற்கொள்ள வேண்டும். இது தவிர, நுண்ணிய பரிசீலனை மூலம், வங்கி சேவைகளை தொடர்ந்து உபயோகிக்க தடையாக இருக்கும் கூறுகளை கண்டறிய வேண்டும். இப்படியான பிரச்சனைகளை களைவதற்க்கு உண்டான திட்டமிடலை இது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும் நிதியியல் கல்வி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் போது, அந்த ஊரின் அரசு அதிகாரிகளையும், கிராமத்தின் முக்கிய மனிதர்களையும் பங்கேற்க செய்யுமாறு பரிந்துரை செய்யப்படுகிறது. நிதியியல் கல்வியில், நல்ல அனுபவம் உள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும் இணைத்துக் கொள்ள ஆவன செய்யலாம். எவ்வாறாயிலும் மாதாந்திர நிதியியல் முகாம்களின் மூலம்,நிதியியலிருந்து விலக்கப்பட்ட மக்களுக்கு, இந்த வழிகாட்டியில் உள்ள நிலைப்படுத்திய உரைக்கோவை சென்றடைதல் வேண்டும்.

# நிதியியல் கல்வி முகாம்கள் - நடத்தும் வழிமுறைகள்

அனைத்து நிதியியல் கல்வியறிவு மையங்களும், கிராமப்புற வங்கிக் கிளைகளும், நிதியியல் முகாம்களை வெளி இடங்களில் நடத்துவதற்க்காக ஆண்டு அட்டவணை தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் இந்த நிகழ்ச்சி மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, குறைந்தபட்சம் இரண்டு மணிநேரம் கொண்ட மூன்று வகுப்புகளாக, மூன்று மாத இடைவெளியில் பரவியதாக நடத்தப்பட வேண்டும்.அட்டவணை ஒழுங்காக வினியோகிக்கப்பட்டதா என்பதும் உறுதி செய்யப்பட வேண்டும். முகாம் நடத்துவதற்கான தகுந்த இடம் முன்னரே உறுதி செய்யப்பட வேண்டும். நடக்கும் இடம் மற்றும் தங்களின் தேவைக்கேற்ப, வங்கிகள் நிகழ்ச்சியை வடிவமைத்துக் கொள்ளலாம். இந்நிகழ்ச்சியின் நோக்கமானது மிக அதிகமான எண்ணிக்கையில் மக்களை வங்கி சேவைகளின் கீழ் கொண்டுவருவதாக இருக்க வேண்டும்.

**முதல் வகுப்பு :**

1. முதல் வகுப்பானது மக்களிடம் நிதியியல் கூறுகளையும், தன்னுடைய பணம் மற்றும் அதை சரிவர பராமரிப்பது பற்றிய விளக்கங்களை நோக்கமாகக் கொண்டு, அது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். கிராம மக்களை குழுவாகக் கூட்டி இந்த வகுப்பை வங்கிகள் நடத்த வேண்டும். முன்கூட்டியே இது பற்றிய பிரசாரம் விளம்பரத்தின் மூலம் செய்து, அதிகமான கிராமத்தினர் பயனடையுமாறு செய்தல் வேண்டும்.

2. முகாம் நடத்தவதற்காக கிராம முக்கியஸ்தர்கள் (மக்களிடம் நல்ல உறவு கொண்ட கிராமத்தினர்), கிராமத்தலைவர் மற்றும் பள்ளி ஆசிரியர் ஆகியோரை ஈடுபடுத்த முன்னதாகவே ஏற்பாடு செய்திடல் வேண்டும். தகுந்த முன்னேற்பாட்டினை நிகழ்ச்சி நடத்தத் தேர்வு செய்திட்ட, இடத்தில் செய்திடல் வேண்டும். அனைத்து வரைபடங்களையும் மக்கள் வரும் முன்னரே அந்த இடத்தில் பொருத்திட வேண்டும்.

3. பங்கு பெறும் பயனாளிகளின் பெயர், வயது, தொழில் ஆகிய தகவல்கள் கொண்ட பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

4. இந்த பாடங்கள், நிதியியல் திட்டமிடல், வரவு செலவு பட்டியலிடல், சேமிப்பு, நிதியியல் குறிப்பேடை பயன்படுத்தும் முறை, வங்கிகளில் சேமிப்பதனால் ஆன பயன்கள், வங்கித் தொடர்பாளர் பற்றிய விளக்கங்கள், நிறுவனம் சார்ந்த மற்றும் நிறுவனம் சாரா கடன்களின் வேறுபாடுகள், கடன் வாங்குவதற்க்கான காரணங்களும் – அதன் விளைவுகளும், பல்வேறு வகையாகக் கடன் பெறுதல் ஆகியவற்றை விளக்கும் வகையில் இருக்க வேண்டும்.

5. நிதியியல் குறிப்பேடை அனைத்து பயனாளிகளுக்கும் கொடுத்து, அதனைக் கொண்டு, வரவு செலவுகளை எவ்வாறு திட்டமிடுதல் மற்றும் எப்படி குறிப்பெடுத்தல் என்பதனை விளக்க வேண்டும். குறிப்பேடுகளின் பயன்களை வலியுறுத்தி, ஒருமாதத்திற்க்கான வரவு – செலவுகளை பதிவு செய்யுமாறு கூற வேண்டும். அடுத்த வகுப்பிற்கு வரும்பொழுது கண்டிப்பாக குறிப்பேடை கொண்டு வருமாறும் அறிவுறுத்த வேண்டும்.

6. வகுப்பின் இறுதியில், அடுத்த வகுப்பிற்க்கான தேதியையும், மற்றும் அடுத்த வகுப்பில் வங்கித் தொடர்பாளர் அறிமுகப்படுத்தப்படுவார் என்பதனையும் தெரிவிக்க வேண்டும். அடுத்த வகுப்பில் பயனாளிகளுக்கு வங்கித் தொடர்பாளர் மூலம் வங்கிக்கணக்கு தொடங்கப்படும் என்பதனை விளக்கி, அவர்கள் அதற்கான ஆவணங்களையும் கொண்டு வரவேண்டும் என்பதை அறிவுறுத்த வேண்டும். அடுத்த வகுப்பில் அனைத்து பயனாளிகளும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்பதையும் தெளிவாகக் கூற வேண்டும்.

7. அனைத்து வரைபடங்களையும், கிராமப் பஞ்சாயத்து அலுவலகத்திலோ, கிராமதலைவர் அலுவலகத்திலோ அல்லது பள்ளியிலோ, நிரந்தரமாக, எந்நேரமும் படிக்கும் வகையில் ஒட்டிட வேண்டும்.

**இரண்டாம் வகுப்பு (முதல் வகுப்பு முடிந்த 15 நாட்களுக்குப் பிறகு)**

1. வருகையை பதிவு செய்யுங்கள். எவரேனும் வரவில்லை என்றால் அதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும். வங்கி தொடர்பாளரை அறிமுகப்படுத்தி, வங்கித் தொடர்பாளருக்கும் வங்கிக்குமான உறவு, அவர் மூலம் செயல்படுத்தும் வங்கிச் சேவையால் அடையும் பயன்கள், பல்வேறுவகையான சேமிப்புகள் மற்றும் கடன் வசதிகள், வங்கித் தொடர்பாளர் மூலம் பெறக்கூடிய பிற சேவைகள், ஆகியவற்றை விளக்கிக் கூறவும்.

2. தகவல் தொழில் நுட்பக் கருவியின் மூலம் எவ்வாறு பணம் எடுப்பது – போடுவது, மற்றும் அதன் சிறப்பம்சங்களை செய்முறை விளக்கம் மூலம் விளக்கிக் கூறவும்.

3. நிதியியல் குறிப்பேடை சரி பார்க்கவும், அதில் தவறுகள் இருந்தால், சரி செய்யவும், உபயோகிப்பதில் ஏதேனும் சிக்கல் இருப்பின், அவற்றை விளக்கி தொடர்ந்து உபயோகிக்க வலியுறுத்தவும்.

4. வங்கிக் கணக்கில் மாதத்துக்கு எத்தனைமுறை பணம் போடலாம் / எடுக்கலாம், எவ்வளவு பணம் போடலாம் / எடுக்கலாம், அதன் உச்சவரம்பு, அதற்கான சேவைக் கட்டணங்கள், அரசாங்க சலுகைகள் நேரடியாக வங்கிக் கணக்கை வந்தடையும் விதம், வங்கிக் கணக்கு வாயிலாக செய்ய கூடிய பணப்பரிமாற்றத்தின் பல்வேறு வகைகள் ஆகியவற்றை விளக்கவும்.

5. வங்கிக் கணக்கு தொடங்க பதிவு செய்யவும். பதிவு செய்தபின், வங்கிக் கணக்கு தொடங்க ஆகும் நேரம் பற்றியும், தொடங்கிய பின் கிடைக்கும் வங்கிக் கணக்கு அட்டை பற்றியும் அறிவுறுத்தவும். அட்டை கிடைத்தவுடன், தங்களின் தினசரி தேவைகளுக்கு வங்கிக் கணக்கை பயன்படுத்த அறிவுறுத்தவும்.

**இரண்டாம் வகுப்பு முடிந்த 15 நாட்களுக்குப் பிறகு, வங்கி அதிகாரிகள், கிராமங்களுக்குச் சென்று அட்டை வழங்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். வங்கித் தொடர்பாளர் தன் பணியை தொடங்கி விட்டதையும், அவர் மூலம் கிராம மக்கள் வரவு செலவு செய்ய இயலுவதையும் உறுதி செய்யவும்.**

**மூன்றாம் வகுப்பு :(இரண்டாம் வகுப்பு முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு)**

1. வங்கிக் கணக்கு தொடங்கிய கிராம மக்களையும், வங்கி தொடர்பாளரையும் ஒரு கூட்டம் கூட்டி நேரடியாக உரையாடவும்.

2. தகவல் தொழில்நுட்ப கருவி மூலம் வங்கிக் கணக்கை செயல் படுத்துவதில் ஏதேனும் சிக்கல் இருப்பின் அவற்றைக் கண்டறியவும். மேலும் சிறப்பாகச் செயல்பட அவர்களின் ஆலோசனைகளைப் பெறவும்.

3. வங்கிக் கணக்கின் பயன்பாட்டை கண்காணிக்கவும். அவற்றில் ஏதேனும் குறை இருந்தால் கண்டறியவும்.

**பின்னர், பயன்பாடு ஒழுங்காக உள்ளதா என்பதை தொடர்கண்காணிப்பின் மூலம் உறுதி செய்யவும்.**

❖❖❖

# உங்களது நிதியை நிர்வகித்தல்

## 1. வருமானம் என்றால் என்ன ?

சம்பளம், ஊதியம், தொழில் மற்றும் விவசாயத்தில் கிடைக்கும் வருவாய் என்ற பலவகையில் உங்களை வந்தடையும் பணமே வருமானம் ஆகும்.

| வருமானம் (பணம்) | தொகை (₹) |
|---|---|
| சம்பளம் (அ) ஊதியம் | 2000 |
| விவசாயம் மற்றும் தொழிலில் கிடைக்கும் வருவாய் | 3000 |
| **மொத்தம்** | **5000** |

## 2. செலவு என்றால் என்ன ?

பலவகையில் நம்மைவிட்டுப் போகும் பணமே செலவு எனப்படும். இது அவசியமான செலவு, அவசியமற்ற செலவு என இரண்டு வகைப்படும். **நாம் நமது செலவுகளைப் புரிந்து கொள்ளுவோம்.**

| செலவு (பணத்தின் பயன்) | தொகை (₹) |
|---|---|
| உணவு, உடை, வீடு | 2000 |
| கல்வி | 1000 |
| கடன் திருப்புதல் | 700 |
| மருத்துவம் | 300 |
| மது,போதை, புகையிலை | 500 |
| சூது | 400 |
| ஆடம்பரச் செலவுகள், திருமணம், பண்டிகை மற்றும் தீர்த்த யாத்திரை | 1100 |
| மொத்தம் | **6000** |





## 3. முதலீடு என்றால் என்ன -

காலப்போக்கில் அதிக வருமானத்தை எதிர்பார்த்து, தங்களுடைய சேமிப்பில் இருந்து பணத்தை எடுத்து நிலம் வாங்குவது, வங்கி வைப்புத் தொகையில் போடுவது போன்ற செயல்களே முதலீடு எனப்படும்.

## 4. சேமிப்பு என்றால் என்ன ?

செலவை விட வருமானம் அதிகமாக இருந்தால், நம்மிடம் மிஞ்சும் பணமே சேமிப்பு ஆகும்.




## 5. கடன் என்றால் என்ன ?

வருமானத்தை விட செலவு அதிகமாகி, நம்மிடம் சேமிப்பும் இல்லையென்றால், அதனை ஈடுகட்ட நாம் அடுத்தவரிடம் இருந்து வாங்கும் பணமே கடன் எனப்படும்.

| வருமானம் | செலவு | விளைவு | செயல் குறிப்பு |
|---|---|---|---|
| ₹ 5000 | ₹4000 | மீதம் ₹ 1000 | மேலும் தொடரவும் |
| ₹5000 | ₹ 5000 | குறைவும் இல்லை மீதமும் இல்லை | சிந்திக்கவும் |
| ₹5000 | ₹ 6000 | குறைவு ₹ 1000 | நிறுத்தவும் |




## கடனைமசளிரே ப்பது எப்படி -

ஏதேனும் ஒரு மாதத்தில் நமது வரவுக்கு மீறி செலவு இருந்தால், நாம் முந்தைய மாதத்தின் சேமிப்பை பயன்படுத்தி குறைவை ஈடுகட்டலாம். ஆனால் சேமிப்பு இல்லாத நேரத்தில் நாம், அதிக வட்டிக்கு கடன் வாங்க நேரிடும்.

இது, நாம் அன்றாட வாழ்வில் நீரை பயன்படுத்துவதற்கு ஒப்பாகும். சில சமயம் குழாயில் நாள் முழுவதும் தண்ணீர் வரும். சில நாட்கள் வரவே வராது. அதற்காக நாம் தண்ணீர் பயன்படுத்துவதை நிறுத்தி விடுகிறோமா- இல்லை! பயன்பாட்டை நிறுத்தாமல் தண்ணீர் நிறைய வரும் நேரத்தில், அதனை சேமித்து, அது வராத நேரத்தில் இதனை பயன்படுத்திக் கொள்கிறோம். இந்த செயலே சேமிப்பு ஆகும். நம் நிதி நிலைமை என்பது, கீழே நீர் வெளியேற ஒரு குழாய் கொண்ட ஒரு வாய் அகன்ற பானை போன்றது. வருமானம் என்பது பானையில் நாம் விடும் தண்ணீர். அந்தக் குழாய் மூலம் வெளியேறும் தண்ணீரே செலவுகள் ஆகும்.

**தேவையற்ற செலவுகளை தவிர்த்து, சேமிப்பை உயர்த்து**

## அவசியமான மற்றும் அவசியமற்ற செலவுகளுக்கான வேறுபாடு என்ன ?

நமது உணவு, உடை, வீடு, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு நாம் செலவிடும் பணம் தவிர்க்க முடியாத செலவுகள் ஆகும். நமது விருப்பங்களுக்காக நாம் செய்யும் செலவுகள் தேவையற்ற செலவுகள் ஆகும். இவை நமது சுகத்திற்காக செய்யும் செலவே அன்றி வாழ்வுக்கு இன்றியமையாதது அல்ல.


## பணத்தை எப்படி நிர்வகிப்பது ?

சரியான முறையில் நிதியியல் திட்டமிடுவதன் மூலம், நாம் நமது பணத்தை சரிவர நிர்வகிக்கலாம். இதன் முதல்படி நிதியில் குறிப்பேடை பயன்படுத்தி நமது ஒரு வார அல்லது மாத வரவு – செலவுகளை குறித்தல் ஆகும்.

## நிதியியல் திட்டமிடல் என்றால் என்ன ?

வாழும் காலத்தில் நமக்கு பணத்தேவை உண்டாக்கும், குழந்தை பிறப்பு, கல்வி, வீடு வாங்குதல், திருமணம், விதை வாங்குதல் போன்றவற்றையும் மற்றும் அவசர கால செலவு ஏற்படுத்தும் மருத்துவம், இறப்பு, விபத்து, இயற்கை சீற்றங்களான வெள்ளம், வறட்சி ஆகியவற்றையும் எதிர்கொள்ள நாம் போடும் திட்டங்களே நிதியியல் திட்டமிடல் எனப்படும்.

## நிதியியல் திட்டமிடல் ஏன் செய்ய வேண்டும் ?




நிதியியல் திட்டமிடல் மூலம் நமது வருவாய் நிலைக்கு ஏற்றாற்போல், நமது உத்தேசமான செலவுகளை முன்னரே திட்டமிட உதவும். இது இரண்டு வகையாக உதவும். ஒன்று – நமது வருமானத்தில் ஒரு பகுதியை நமது எதிர்காலத் தேவைகளுக்காக சேமித்திடுவதற்கு. இரண்டு – நமது அவசியமற்ற செலவுகளைக் குறைத்து நமது எதிர்காலத் தேவைகளுக்காக சேமித்திடுவதற்கு.

ஆகவே நமது கடன்களை நல்ல முறையில் அடைத்திடவும், சேமிப்பை நிலைநிறுத்தி, நமது பணத்திலேயே வீடு வாங்க, உயர் கல்விக்குச் செலவிட நாம் இன்றே நிதியியல் திட்டமிடலை தொடங்குவோம். **திட்டமிட்ட நிதியியல் மூலம் உங்கள் இலக்கை அடையுங்கள்.**

## நிதியியல் திட்டமிடலை எவ்வாறு செய்வது ?

- நடப்பு நிதிநிலைமையை ஆராயவும் (நாம் இன்று எங்கு இருக்கிறோம்)
- நமது நிதித் தேவைகளைக் கண்டறியவும் (குறுகிய காலத்தில் நாம் எதை அடைய விரும்புகிறோம் (ஓராண்டில்), மத்திய காலத்தில் (1-5 ஆண்டுகள்), நீண்ட காலத்தில் (5 ஆண்டுகளுக்கு மேல்).
- ஒவ்வொரு பொருளின் விலையையும், அடைய விரும்பும் காலத்தையும் முடிவு செய்யவும். ஒரு மாதம் / வாரத்திற்கு நாம் எவ்வளவு சேமிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும்.
- நிதியியல் குறிப்பேடை பயன்படுத்தி வார / மாத வரவு செலவுகளைக் குறித்து வைக்கவும்.
- செலவுகளை குறையுங்கள் – சிக்கனமாக செலவு செய்யுங்கள்.
- சேமிப்புகள் திட்டமிட்டபடி நடக்கின்றதா என்பதை அவ்வப்போது கண்காணியுங்கள். இல்லையென்றால் செலவுகளை கண்கானித்து, எதை

தவிர்க்க முடியுமோ அதை தவிர்த்து, சேமிப்பை உயர்த்தும் வாய்ப்புகளை கண்டறியுங்கள்.

- ♦ வார/மாத முடிவில் சேமித்த பணத்தை சரிபாருங்கள்.
- ♦ சேமிப்பை வங்கிக் கணக்கில் முதலீடு செய்யுங்கள்.

## நாம் ஏன் நிதியியல் குறிப்பேடை பயன்படுத்த வேண்டும் ?

நிதியியல் குறிப்பேடு நமது நிதியியல் திட்டமிடலுக்கு உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் நாம் செய்யும் தேவையான, மற்றும் தேவையற்ற செலவுகளை நாம் அறிந்து கொள்ள முடியும். இது தேவையற்ற செலவுகளைக் கண்டறிந்து குறைத்திடவோ, தவிர்த்திடவோ உதவும். இது நமக்கு தெரியும் போது, நாம் நமது செலவுகளை நெறிப்படுத்தி, சேமிப்பை உயர்த்தி, வறுமைச் சக்கரத்தின் சுழற்சியிலிருந்து விடுபட முடியும்.

**செலவு செய்வதற்க்கு முன் இருமுறை யோசியுங்கள்.**





உதாரணத்திற்கு, நமது மாத வருமானம் ₹5000 என்று வைத்துக் கொள்வோம். நிதியியல் குறிபேடை பயன்படுத்தி நமது செலவுகளான உணவு, உடை, வீடு (₹2000), குழந்தைகளின் கல்வி (₹1000), வாடகை (₹700), மருத்துவம் (₹300), மற்றும் விருப்ப செலவுகளான பண்டிகை, சூர்த்த யாத்திரை (₹500), மது மற்றும் ஐதாட்டத்திற்கான செலவு (₹500) என்பதை அறிகிறோம்.

நாம் நமது விருப்பத்துக்காக பண்டிகை மற்றும் சூர்த்த யாத்திரை வகையில் செய்யும் செலவான ₹500ல் இருந்து ₹200 ஆக குறைத்து, குடி மற்றும் ஐதாட்டத்திற்கான செலவை தவிர்த்தால், உடனடியாக நாம் ₹800ஜி சேமிக்க முடியும். நிதியியல் குறிபேடை பயன்படுத்தி நாம் பணத்தை சேமித்து விட்டோம். அது இல்லையென்றால் நம்மைஅறியாமலே, பணம் நம் கைகளை விட்டுப் போயிருக்கும்.

## நாம் நமது செலவுகளை எவ்வாறு குறைப்பது ?

நாம் சமயோசிதமாக செலவு செய்வதன் மூலம், சில உபரி விஷயங்களிலான நமது செலவை குறைக்க முடியும். இப்படிச் சேமித்த பணம் தான், நமது தேவையான செலவுகளை செய்ய, சம்பாத்தியம் அதிகரிக்கமால், நமக்கு கிடைத்த கூடுதல் வருமானம் ஆகும். இதை புரிந்து கொள்வது மிக எளிது.




உதாரணத்திற்கு நாம் தினமும் 4 கோப்பை தேநீர் அருந்துகிறோம் என்று வைத்துக் கொண்டால், கடந்த ஒரு மாதத்தில் 120 கோப்பை தேநீர் அருந்தியிருப்போம். ஒரு கோப்பை நூ5 என்று வைத்துக் கொண்டால் மொத்தம் ₹600 செலவு பிடித்திருக்கும். ஒரு நிமிடம் நின்று சிந்தியுங்கள், நமக்கு தினமும் 4 கோப்பை தேநீர் தேவையா– நாம் இரண்டு கோப்பை மட்டும் அருந்தியிருந்தால் நமது செலவு ₹300 ஆகவும், சேமிப்பு ₹300 ஆகவும் இருந்திருக்கும். நமது விருப்பம் 4 கோப்பை தேநீராக இருந்தாலும், நமது தேவை 2 கோப்பையில் நிறைவேறி இருக்கும். ஒரு வகையில் நமது மாத சேமிப்பு வருமானம் ₹300 கூடியிருக்கும். நாம் ஆண்டில் 3600 சேமித்து இருப்போம்.

**சேமித்த பணமும் சம்பாதித்த பணமே.**

❖❖❖

# சேமிப்புகள்

## நாம் ஏன் சேமிக்க வேண்டும் ?




நாம் சேமிப்பதை தொடர் வழக்கமாக ஏற்படுத்திக் கொண்டால், நமது வருமானத்தை விட செலவுகள் அதிகம் ஆகும் நேரத்திலும் நமக்கு அதிகப் பணம் தேவைப்படும் நேரத்திலும் நாம் அதை பயன்படுத்திக் கொள்ளலாம்.

- பிறப்பு, கல்வி, திருமணம், விதை வாங்குதல், சொந்த வீடு வாங்குதல் போன்ற அதிக செலவுகளை சமாளிக்கவும்
- மருத்துவம், விபத்து, மரணம், இயற்கை சீற்றங்கள் போன்ற எதிர்ப்பாராத நிகழ்வுகளின் போது செலவுகளை எதிர்கொள்ளவும் அவசர காலங்களில் சேமிப்பு நம்மை மீட்கும்.
- நம்மால் சம்பாதிக்க முடியாத பொழுது, பணம் தேவைப்படுகிறது.
- முதுமைகாலத்தில் பணம் தேவைப்படுகிறது.
- நமது சராசரி வருமானத்தை கொண்டு வாங்க முடியாத சில பொருட்களை வாங்க, பணம் தேவைப்படுகிறது.

சுருக்கமாகக் கூற வேண்டுமானால், நமது சம்பளத்தைவிட கூடுதலாக செலவு செய்ய நேரிடும் போது, தேவையான சேமிப்புத் தொகை இருந்தால், நமது பணத்திலேயே இந்த செலவுகளை மேற்கொள்ள முடியும்.

## எப்படி சேமிப்பது ?

நாம் செலவுகளை குறைத்தோ, வருமானத்தை கூட்டியோ சேமிக்கலாம். வருமானம் கூடவில்லை என்று வைத்துக் கொண்டால், நமது செலவுகள், தேவையானவை, தேவையற்றவை என்று இரண்டு வகைகளில் செல்லும். உணவு, உடை, வீடு பராமரித்தல், விதைகள், விவசாயக் கருவிகள், குழந்தைகளின் கல்வி, மருத்துவம் போன்ற செலவுகள் தவிர்க்க முடியாதவை. இவை நமது அன்றாட வாழ்க்கைக்கு அவசியம் ஆகும். ஆனால் வாழ்க்கைக்கு தேவையற்ற செலவுகள் நமது சுகத்திற்க்காக

நாம் செய்யும் அவசியமற்ற செலவுகள் ஆகும். இந்த செலவுகளை நாம் குறைக்கவோ, தள்ளிபோடவோ, தவிர்க்கவோ முடியும்.

(உ.ம்) மது, போதை, சூது, புகையிலை இவற்றிற்க்காக செய்யும் செலவுகளை தவிர்க்க முடியும். திருமணம், பண்டிகை, தீர்த்த யாத்திரை இவற்றிற்கான ஆடம்பர செலவுகளை குறைக்க முடியும். தொலைக்காட்சிப் பெட்டி, வாகனம், நகை போன்றவை வாங்குவதற்கான செலவைத் தள்ளிப் போட முடியும். நாம் எந்த அளவிற்கு தேவையற்ற செலவுகளை குறைக்கிறோமோ ,அந்த அளவிற்கு தேவையான பொருள்களுக்கான செலவுகளுக்காக நமது சேமிப்பை அதிகப்படுத்த முடியும்.

எனவே தேவையற்ற செலவுகளைக் குறைத்து, எதிர்காலத்தில் தேவைபடும் செலவுகளுக்காக சேமிக்கவும்.

## நமது அன்றாட தேவைகளையே சமாளிக்க முடியாத பொழுது, நாம் எவ்வாறு சேமிக்க முடியும் ?

என் தேவைகளையே என்னால் சமாளிக்க முடியாத பொழுது, எப்படி சேமிப்பேன்– என்பது மிக பொதுவான ஒரு பொய்க் காரணம். ஆனால் உண்மை என்னவென்றால் எல்லோராலும் சேமிக்க முடியும், எல்லோரும் சேமிக்க வேண்டும். நமது வருமானத்தின் ஒரு பகுதியை முதல் நாளில் இருந்தே சேமிப்புக்காக ஒதுக்கி விட வேண்டும். கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் வாழ்வின் தொடக்கத்திலேயே, அது சிறிய தொகையாகவே இருந்தாலும் சீராக சேமிக்க தொடங்கி விட வேண்டும். எதிர்பாராத லாபம், அல்லது வருவாய் வந்தால் அதை முழுமையாகவோ அல்லது பெரும் பகுதியையோ சேமித்து விடவேண்டும். இது நமது எதிர்கால, எதிர்பாராத செலவுகளைப் பற்றிய பணத்தேவை கவலைகளைக் குறைக்க உதவி செய்யும்.

நாம் ₹100 சம்பாதித்தால், ₹20ஐ சேமிக்கலாம், ₹10 சம்பாதித்தால் ₹2ஐ சேமிக்கலாம். நாம் ₹100 இல் ₹20ஐ சேமித்தால் சம்பாதிக்கும் 5 நாட்களில் நாம் ஒரு நாள் ஊதியத்தை சம்பாதித்து விடலாம். இதன் பொருளானது நூறு சம்பாதிக்கும் நாட்களில், நமது சேமிப்பு, 20 சம்பாதிக்கும் நாட்களின் ஊதியம் மற்றும் வட்டியாகும். இது அற்புதமாக இல்லையா!

| | |
|---|---|
| ஒரு நாள் வருமானம் | ₹100 |
| ஒரு நாள் செலவு | ₹ 80 |
| ஒரு நாள் சேமிப்பு | ₹ 20 |
| ஒரு மாத சேமிப்பு | 20x30= ₹ 600 |
| ஓராண்டு சேமிப்பு | 600x12= ₹ 7200 |
| ஆண்டுக்கு 8% வட்டி | ₹ 318 |
| ஆண்டு இறுதியில் சேமித்த தொகை | ₹ 7518 |
| இது 75 நாட்களின் வருவாய்க்கு நிகரானது. | |

## எவ்வளவு காலம் சேமிக்க வேண்டும் ?

| ஓராண்டு சேமிப்பு (₹) | 1000 | 1000 | 1000 |
|---|---|---|---|
| சேமித்த ஆண்டுகள் | 40 | 30 | 20 |
| சேமித்த தொகை (₹) | 40000 | 30000 | 20000 |
| ஆண்டுக்கு 10 % வட்டியுடன்(₹) | 422878 | 142033 | 39900 |
| மொத்த சேமிப்பு தொகை 65 வயதில் (₹) | 462878 | 172033 | 59900 |

எவ்வளவு அதிக நாட்கள் சேமிக்கிறோமோ அவ்வளவு நமது சேமிப்பு வளரும். எவ்வளவு அதிகமாக நமது சேமிப்பு இருக்கிறதோ, அந்த அளவிற்கு நாம் நமது எதிர்பாரா செலவுகளுக்கும், முதுமைகாலத்திற்கும் அடுத்தவரை நமது தேவைகளுக்கு நம்பி இல்லாமல், தயாராக இருப்போம். நம் சேமிப்பு வளர வளர நமது தேவைகளுக்காக கடன் வாங்க வேண்டிய நிலை வராது.

நீண்ட நாட்கள் சேமிக்கும் பொழுது நமது சேமிப்பு வட்டியுடன் கூடி பலமடங்கு பெருகும்

❖❖❖

# வங்கிகளில் சேமித்தல்




## எங்கே சேமிப்பது ?

நாம் நமது தலையனைக்கு அடியிலோ அல்லது அரிசி பாத்திரத்திலோ பணத்தை சேமித்து வைத்திருக்கக்கூடும். ஆனால் அது என்ன ஆகும் – நாம் எந்த நேரமும் அதன் பாதுகாப்புப் பற்றி கவலையோடு இருக்க வேண்டி இருக்கும். நாம் கடுமையாக உழைத்து சேமித்த பணத்தை எலிகளோ, கரையானோ அரித்து விடலாம், யாராவது திருடி விடலாம், அல்லது நாம் செலவழிக்கும் சபலத்துக்கு ஆட்படலாம், அல்லது உங்களிடம் இருந்து மற்றவர் கடன் வாங்கும் சபலம் கொள்ளலாம். அத்துடன் வீட்டில் சேமித்த பணம் வளராது. வங்கியில் சேமிப்பதே சிறந்த வழியாகும். மிகச்சிறிய அளவு பணத்தை நாம் பாத்திரங்களில் வைக்கலாம். ஆனால் நமது சேமிப்புகளை வங்கியில் வைப்பதே அதிக புத்திசாலித்தனமாகும்.

**உழைத்துப் பெற்ற ஊதியத்தை தொலைத்து விடாதீர்கள். எப்போதும் வங்கியில் சேமியுங்கள்.**

## ஏன் வங்கியில் சேமிக்க வேண்டும் ?

வங்கியில் சேமிக்கும் பணம் பாதுகாப்பானது. ஏனென்றால் வங்கிகள் பல நெறிமுறைகளுக்கு உட்பட்டது, வங்கிகள் சேமிப்பைத் தொகுத்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது. பாதுகாப்பு அளிப்பது மட்டுமல்லாமல், வங்கிகள் பணம் செலுத்த கட்டணம் ஏதும் வஜலிப்பதில்லை. அத்துடன் வங்கி, உங்கள் சேமிப்புக்கு வட்டி தருகிறது. இதனால் வங்கியில் உங்கள் பணம் பெருகுகிறது. வங்கியில் சேமிப்பதால், உங்கள் பணத்தை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். வங்கியில் பணப் பரிவர்த்தனை ஒளிவு மறைவற்றது. வங்கிகள் மேலும் பல பயன்தரும் சேவைகளையும் தருகிறது. வங்கியில் சேமிப்புக் கணக்கு இருந்தால், கடன் மற்றும் பணப் பறிமாற்றம் ஆகிய சேவைகளை எளிதாக குறைந்த செலவில் பெறலாம். நம் மரணத்திற்கு பிறகு வாரிசாக நமது பணம் யாருக்கு போய் சேர வேண்டும் என்பதையும் நியமிக்கலாம்.

## வாரிசு நியமனம் என்றால் என்ன ?

ஒரு சேமிப்பாளர், தன் மரணத்திற்கு பிறகு தனது வங்கி கணக்கில் உள்ள பணம் எந்த நபரை சென்று அடைய வேண்டும் என்று குறிப்பிடுவது வாரிசு நியமனம் எனப்படும். எனவே வாரிசுதாரர் பணத்தை எளிதாக பெற்று கொள்ளும் படியாக வங்கிக் கணக்கிற்கு வாரிசு நியமனம் செய்வது விரும்பத்தக்கது.

## வங்கி கணக்கு வைப்பதால் என்ன பயன்கள் ?




- ♦ பிற அரசாங்க நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அடையாளத்தை வங்கி கணக்கு நமக்கு கொடுக்கிறது.
- ♦ பணம் போடுதல், எடுத்தல், வட்டி போன்ற அனைத்து பரிவர்த்தனைகளும் நமக்குத் தெரியுமாறு ஒளிவு மறைவின்றி நடைபெறுகிறது.
- ♦ வங்கிகள் தனது வாடிக்கையாளர்களிடம் எந்த விதமான வேறுபாடும் பார்ப்பதில்லை. விதிமுறைகள் ஒரே வகையான அனைத்து வாடிக்கையாளருக்கும் சமமானதே.
- ♦ வங்கி கணக்கில் உள்ள நமது பணம் பாதுகாப்பாக உள்ளது.
- ♦ வங்கிகள், நமது தேவைக்கேற்ப, சேமிப்பு, வைப்பு மற்றும் தொடர் வைப்பு என்று பலவிதமான கணக்குகள் தொடங்க உதவுகிறது. அவற்றிற்கு வட்டியும் கொடுக்கிறது.
- ♦ நமது சம்பளம்/ஊதியம் நேரடியாக வங்கி கணக்கில் வந்து சேர முடியும்.
- ♦ மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்ட ஊதியம், அரசாங்க தீய்ணுதியம் போன்ற அனைத்து அரசாங்க உதவித் தொகைகளும் மின்ன% பணப்பறிமாற்றம் மூலமாக நேரடியாக வங்கிக் கணக்கில் வந்து சேரும்.
- ♦ நமக்கு தேவையான பொழுது நாம் பணம் போடவும் மற்றும் எடுக்கவும் செய்யலாம்.
- ♦ வளர்ச்சி பணிகளுக்காக, மிகவும் நியாயமான வட்டி விகிதத்தில், நமக்கு தேவைப்படும் பொழுது, வங்கி நமக்கு கடன் வழங்குகிறது. வங்கி கணக்கு இருந்தால் கடன் வாங்குவது எளிதாக இருக்கும்.

- நாம் வங்கி மூலமாக பணத்தை அனுப்பவும் செய்யலாம்.

**சேமிப்பு வங்கி கணக்கு, வங்கியின் அனைத்து சேவைகளையும் பெறுவதற்க்கான திறவு கோல் ஆகும்.**

## மின்னணு பணப்பறிமாற்றம் என்றால் என்ன ?

சமுதாய பாதுகாப்பு சேவைகளான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புதிட்ட ஊதியம், முதியோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம், சமையல் எரிவாயுக்கான அரசாங்க மானியம் ஆகியவை மின்னனு பணபரிமாற்றம் மூலம் பெறமுடியும். நமக்கு வந்து சேர வேண்டிய பணம் சரியான அளவிலும், சரியான நேரத்திலும், எந்தவிதமான இடைத்தரகர்களும் இன்றி நேரடியாக நமது வங்கிக் கணக்கை வந்தடையும். இதன் மூலம் தற்போதைய நடை முறையில் உள்ள பண விரயமும், தாமதமும் தவிர்க்கப் படுகிறது. நமக்குத் தேவையான பொழுது நாம் வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம். நாம் வங்கியின் பிற சேவைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## பணம் அனுப்புதல் என்றால் என்ன ?

நமது நாட்டின் எந்த மூலையில் உள்ள மக்களுக்கும், நம்மால் வங்கியின் மூலம் பணம் அனுப்ப முடியும். வங்கி, நமது பணத்தை ஒருவரிடம் இருந்து மற்பெறாருவருக்கும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும், விரைவாகவும், பாதுகாப்பாகவும், திறமையான முறையிலும் அனுப்பி வைக்கிறது. அதனால், நம்மிடம் வங்கி கணக்கு இருந்தால் வேறு ஊரில் படிக்கும் நமது குழந்தைகளுக்கு நம்மால் எளிதாக பணம் அனுப்ப முடியும். வேறு ஊர்களில் இருக்கும் நமது உறவினர்களிடம் இருந்து, நம்மால் பணத்தை நமது வங்கி கணக்கில் வரவு வைக்கவும் முடியும்.

## வட்டி என்றால் என்ன ?

நாம் சேமித்த பணத்துக்கு மேலாக நமக்கு ஈட்டி கொடுக்கும் பணம், நாம் வாங்கிய கடனுக்கு மேலாக நாம் கட்ட வேண்டிய பணம், இவையே வட்டி எனப்படும். நாம் வங்கியில் சேமிக்கும் பணம் அப்படியே வைக்கப்படுவதில்லை. அந்தப் பணத்தை வங்கி, மக்களுக்கு கடனாக கொடுக்கும். கடனை வாங்கியவர்கள் அதற்கு வட்டி கட்டுவார்கள். உதாரணமாக நாம் வங்கியில் ரூ.1000 வைப்புத் தொகை வைத்தால், அதை வங்கி இன்னொருவருக்கு கடனாக கொடுக்கும். ஓராண்டுக்குப்பின் அவர் ரூ.100ஐ வங்கிக்குக் கட்டணமாகச் செலுத்துவார் என்றால், நமக்கு அதன் பங்காக வங்கி ரூ.40ஐ கொடுக்கும். இந்த கூடுதல் வருமானமே, நாம் ரூ.1000 ஒரு வருடம் வங்கியில் வைத்ததற்க்கான வட்டி என்று அறியப்படும்.

## அடகு கடைக்காரர் போடும் வட்டியும் 3% – 5% எனும் பொழுது, வங்கியைவிட அவரிடம் அதிக வட்டி கொடுக்கிறோம் என்று எப்படி சொல்ல முடியும் ?

வங்கிகள் அறிவிக்கும் வட்டி விகிதம் வருட வட்டி விகிதம் ஆகும். ஆனால் அடகு கடைக்காரின் வட்டிவிகிதம், மாதவட்டி விகிதம் ஆகும். அதனால் அடகு கடைக்காரர் 3% என்று கூறினால், அது 36% ஆகும் (3×12) அதே சமயம் வங்கியின் 12% வட்டி விகிதம் என்பது வருடத்திற்கு 12% ஆகும். அடகு கடைக்காரின் வட்டி விகிதம் வங்கியை விட கூடுதலாக இருப்பதால், நாம் அவருக்கு மிக அதிக அளவில் பணம் திரும்ப செலுத்துகிறோம்.

## வைப்புக் கணக்குகள் எத்தனை விதமானவை ?

வங்கி நமக்கு மூன்று வகையான வைப்புக் கணக்குகளை அளிக்கிறது. அவை சேமிப்பு வங்கி கணக்கு, நீண்ட கால வைப்புக் கணக்கு, தொடர்வைப்பு கணக்கு ஆகும்.

- **சேமிப்பு வங்கி கணக்கு**-இது நாம் அன்றாடம் மீதமாகும் பணத்தை போடுவதற்குப் பயன்படும். நமக்கு தேவையான பொழுது நம் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். நம் அவசர தேவைகளுக்காக, நம் இருப்புக்குமேல் கடன் பெறும் வசதியும் உள்ளது.
- **நீண்ட கால வைப்புக் கணக்கு** என்பது நமது தேவைக்கேற்றவாறு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நமது பணத்தை சேமிப்பது ஆகும். முன் குறிப்பிட்டு உரிய காலத்துக்கு பணத்தை முதலீடு செய்வதால் சேமிப்புக் கணக்கைவிட அதிக வட்டி இதில் கிடைக்கும். நாம் வேண்டுமென்றால் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பே பணத்தை எடுத்து விடலாம். ஆனால் அப்பொழுது நமக்கு கிடைக்கும் வட்டித் தொகை குறையும்.
- **தொடர் வைப்பு கணக்கு** என்பது ஒரு குறிபிட்ட காலத்திற்கு, தினமுமோ, ஒவ்வொரு வாரமுமோ, அல்லது ஒவ்வொரு மாதமுமோ தொடர்ந்து பணத்தை சேமிப்பது ஆகும். நிலையான சேமிப்பை வைக்க இது பயன்படும்.

## சேமிப்பு வங்கிக் கணக்கு தொடங்குவது எப்படி ?

வங்கிக் கணக்கு தொடங்குவதற்கான விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்து, ஒரு தற்போதைய புகைப்படத்துடன் “உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்”, படிவத்தை நிரப்ப தேவையான ஆவணங்களை (நமது அடையாளச் சான்று, மற்றும் விலாசச் சான்று) கொடுத்து வங்கி கணக்கு தொடங்கலாம்.

## கையில் பணம் இல்லாத பொழுது எப்படி வங்கிக் கணக்கு தொடங்க முடியும் ?

இப்பொழுது வங்கிக் கணக்கு தொடங்க பணம் தேவையில்லை. இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளையும் பணம் இன்றி கணக்குத் தொடங்க அறிவுறுத்தியுள்ளது. "அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கு" என்ற கணக்கை யார் வேண்டுமானாலும் பணம் இன்றி தொடங்கி செயல் படுத்த முடியும்.

## அடிப்படை சேமிப்பு வங்கிக் கணக்கின் சிறப்பு அம்சங்கள் என்ன ?

இது கணக்கில் மீதம் ஏதும் இல்லாவிட்டாலும் செயல்படும் வங்கிக் கணக்கு. எத்தனை முறை வேண்டுமானாலும் சேவைக் கட்டணம் இன்றி பணம் செலுத்தலாம். அத்துடன் ஒரு மாததிற்கு 4 முறை சேவை கட்டணம் இன்றி பணம் எடுக்கலாம். நமக்கு பாஸ்புக் மற்றும் ஸ்மார்ட் கார்டு, சேவை கட்டணம் இன்றி கிடைக்கும். இதை நமது அன்றாட தேவைகளான, பணம் போடுதல், எடுத்தல், பணம் அனுப்புதல், அரசாங்க மானியங்களை நேரடியாகப் பெறுதல் ஆகிய அனைத்திற்கும் பயன்ப் படுத்திக்கொள்ளலாம்.

## "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்" என்றால் என்ன ?

வங்கிகள் கணக்கு தொடங்குவதற்கு முன், வாடிக்கையாளரை பற்றிய சில விவரங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்பது விதிமுறையாகும். அதனால், இதற்கு தேவையான ஆவணங்களாகிய புகைப்படம், அடையாளச் சான்று, விலாசச் சான்று ஆகியவற்றை கணக்கு துவங்குவதற்கான விண்ணப்பத்துடன் வங்கியில் ஒப்படைக்க வேண்டும். ஆதார் அட்டையின் உதவி கொண்டும் கணக்கு தொடங்கலாம். இந்த ஆவணங்கள் இல்லாதவர்கள், தளர்த்தப்பட்ட விதிமுறை மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு அட்டை கொண்டோ, அல்லது சுய சான்றிதழ் மூலமாகவோ தொடங்க முடியும். இப்படி தொடங்கிய கணக்குகள், சிறிய கணக்குகள் என்று வரையறுக்கப்பட்டு சில கட்டுபாடுகளுடன் செயல்படும்.

## வங்கிக் கிளை இல்லாத கிராமத்தில் எப்படி கணக்கு தொடங்குவது ?

இப்பொழுது வங்கிச் சேவை பெற வங்கிக் கிளை தேவையில்லை. வங்கிகள், வங்கித் தொடர்பாளர்களை தங்களின் பிரதிநிதிகளாக நியமித்து உள்ளன. இவர்கள், உள்ளூர் மக்களாக (அந்த இடத்தின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்கள்) அந்த கிராமத்திற்க்கும் மற்றும் சுற்றுபுற கிராமத்திற்கும் தேவையான அனைத்து வங்கி சேவைகளையும் இவர்கள் செய்வார்கள். வங்கித் தொடர்பாளரை நியமிக்கும் பொழுது, அவர்களை வங்கி அதிகாரிகள் கிராமமக்களுக்கு அறிமுகப் படுத்துவார்கள். வங்கித் தொடர்பாளர் பற்றிய விவரங்களை நாம் கிராம பஞ்சாயத்திலும் பெறலாம்.

## வங்கித் தொடர்பாளர் யார்? அவர் எப்படி செயல்படுகிறார்?

உள்ளூரைச் சேர்ந்த தனிபட்ட மனிதரையோ, மற்றவரையோ, வங்கித் தொடர்பாளராக நியமிக்க வங்கிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. வங்கித் தொடர்பாளர், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கையில் ஏந்தும் கருவி, ஸ்மார்ட் கார்ட் பயன்படுத்தும் கருவி, கைபேசி ஆகியவை கொண்டு வங்கி சேவைகளை வழங்குவார்.

**வங்கிச் சேவை இப்போது உங்கள் வீட்டு வாசலில்**

## வங்கித் தொடர்பாளரிடம் சேமித்தால் நமது பணம் பாதுகாப்பாக இருக்குமா?

வங்கிக் கிளை தொலைவில் உள்ளதால், வங்கி தேவைகளை உங்களுக்கு விட்டுவாசலில் வழங்க வந்தவரே வங்கித் தொடர்பாளர் ஆவார். அவரிடம் கொடுத்த பணம், வங்கியில் கொடுத்த பணத்துக்கு ஈடாகும். பரிவர்த்தனைகள், தகவல் தொழில் நுட்ப கருவிகொண்டு, வங்கியின் புத்தகங்களில் பதிவாகும். வாடிக்கையாளர் பயன்படுத்திய சேவைகளுக்கான ரசீது வங்கியின் சார்பாக உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். அதை அவர்கள் சரிபார்த்து கொள்ளலாம். மேலும் வங்கி தொடர்பாளர் மூலம் செய்யப்படும் பணப் பரிவர்த்தனை ஆனது கைரேகை (பயோமெட்ரிக்) அல்லது வாடிக்கையாளர்கதேர்தேர்வு செய்த இரகசிய எண் (பின்) கொண்டு செய்யப்படுவதனால் வாடிக்கையாளரைத் தவிர வேறு யாரும் பரிவர்த்தனை செய்ய முடியாது. வங்கிக் கணக்கு பாதுகாப்பானது.

## வங்கி தொடர்பாளர் மூலம் வழங்கப்படும் சேவைகள் யாவை?

இருப்புக்குமேல் கடன் வசதியுள்ள சேமிப்பு வங்கி கணக்கு, கால வைப்புக் கணக்கு, தொடர் வைப்புக் கணக்கு ஆகிய சேவைகள் வங்கி தொடர்பாளர் மூலம் வழங்கப்படுகிறது. நமது கணக்கில் இருந்து பணத்தை அனுப்பவோ, நமது கணக்கிற்கு வரும் பணத்தை வரவு வைக்கவோ, அவர்கள் உதவி கொண்டு செய்ய முடியும். வருமானம் ஈட்ட கூடிய விவசாயத் தேவைகளுக்கான கிசான் கடன் அட்டை மற்றும், இதர விவசாயமல்லாத பணிகளுக்கான பொது கடன் அட்டை ஆகியவை அவர்கள் மூலம் வழங்க முடியும்.






## இருப்புக்குமேல் கடன் என்றால் என்ன ? மற்ற கடன்களிலிருந்து இது எப்படி மாறுபடுகிறது ?

இதர அவசர செலவுகளை சமாளிக்க உதவும், சிறிய அளவிலான இருப்புக்குமேல் கடன் பெறும் வசதி, சேமிப்பு வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. நமக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்குள் எந்த ஆவணங்களும் இல்லாமல், சிறிய அளவிலான இருப்புக்குமேல் கடன் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் அவசர காலத்தில், சரியான சமயத்தில் நாம் பயன் பெற முடியும். நாம் கடனாக பெற்ற தொகைக்கான வட்டியை, நாம் வங்கியில் செலுத்த வேண்டும். மற்ற கடன்களான கிசான் கடன் அட்டை, பொது கடன் அட்டை ஆகியவை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வருவாய் அதிகரிக்கும் பணிக்காக வழங்கப்படுகிறது.

❖❖❖

# கடன்கள்

## வருமானத்திற்கும், கடனுக்கும் என்ன வேறுபாடு ?

ஒவ்வொரு கடனையும் நாம் திருப்பி செலுத்த வேண்டும். அதை நாம் சம்பாதித்த பணமாகவோ அல்லது வருவாயாகவோ எண்ண முடியாது. நாம் சம்பளம் அல்லது ஊதியம் மூலமாக பெற்ற பணம் நமது வருவாய் ஆகும். அதே நேரம் வாங்கிய கடனுக்காக நாம் செலுத்தும் தவணைகள் செலவுகள் ஆகும்.

## நாம் எப்பொழுது கடன் வாங்குவோம் ?

நமது செலவுகள் நமது வருமானத்தை மிஞ்சும் பொழுதும், அவசர கால தேவைகளுக்கும், நாம் கடன் வாங்குவோம். சில வணிகச் செயல்பாடுகளுக்கும் நாம் கடன் வாங்குவோம்.

## நமக்குப் பணப்பற்றாகுறை வரும் பொழுதெல்லாம் கடன் வாங்க வேண்டுமா?

பண்டிகைகள் கொண்டாடவது , ஆடம்பர திருமணம் செய்யவது, நகைகள் வாங்குவது, விலை உயர்ந்த வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது போன்ற வளர்ச்சியை பீ ண்டாத செலவுகளுக்குகாக கடன் வாங்க கூடாது. இவற்றிற்காக நமது வருமானத்தில் இருந்தோ அல்லது சேமிப்பில் இருந்தோ தான் செலவு செய்ய வேண்டும். இதற்கு உங்கள் தற்போதைய வருமானம், மற்றும் சேமிப்பை பயன்படுத்தவும். இவற்றிற்காக கடன் வாங்க வேண்டிய கட்டாயம் வந்தால், முதலில் நமது வருமானத்தில் இருந்து நம்மால் எவ்வளவு திரும்ப செலுத்த முடியும் என்பதை அளவிடுங்கள். இந்த செலவுகள் நமக்கு எந்த கூடுதல் வருமானத்தையும் கொடுக்கப் போவதில்லை. பின்னர் எப்படிக் கடனை திருப்பிச் செலுத்த முடியும் – அதே நேரம் இந்த கடனை அடைப்பதற்காக நாம் மென் மேலும், வெவ்வேறு வழிகளில் கடன் வாங்கி, கடன் சுமையில் விழநேரிடும்.




**வரைமுறை இல்லா கடன், வளமான வாழ்க்கைக்கு எமன்.**

## நாம் ஏன் வருமானம் ஈட்டும் பணிகளுக்காக மட்டுமே கடன் வாங்க வேண்டும் ?




கடன் வாங்கும் பொழுதே, அதனை வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள். அதனால் வாங்கும் பொழுதே, நம்மால் எவ்வளவு திருப்பிச் செலுத்த முடியும் என்பதையும் ஆலோசிக்க வேண்டும். நாம் தொழில் செய்ய கடன் வாங்கும் பொழுது, இது நமது வருமானத்தை உயர்த்தும். இந்த கூடுதல் வருமானத்தின் உதவியால் நம்மால் கடனை திருப்பிச் செலுத்த முடியும். எடுத்துக்காட்டாக நாம் வங்கியில் இருந்து விதை வாங்க ₹1000 கடன் வாங்கினால், அது நமக்கு ₹10,000 திற்கான விளைச்சலை தரும். நாம் ₹1000 + ₹100 வட்டி சேர்த்து வங்கிக்குச் செலுத்தினால், நம்மிடம் மீதமுள்ள ₹8900 கூடுதல் வருமானம் ஆகும். நாம் வட்டியுடன் திரும்பி செலுத்தும் பணத்தை விட, கூடுதல் இலாபம் தரும் தொழிலுக்கு மட்டுமே நாம் கடன் வாங்க வேண்டும். இல்லையென்றால் இந்த கடனை அடைக்க மேலும் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும்.

**வருவாய் ஈட்டும் தொழில்களுக்கு மட்டும் கடன் வாங்குங்கள்.**

## நாம் ஏன் அளவுடன் கடன் வாங்க வேண்டும் ?

நாம் வாங்கும் எந்தக் கடனையும் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும். அதைத் திருப்பிச் செலுத்தும் அளவிற்கு நமக்கு வருமானம் உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அதற்கு எளிமையான வழி, உங்கள் மாத வருமானம், செலவு மற்றும் சேமிப்புகளை கணக்கிடுங்கள். உங்கள் சேமிப்பு, உங்கள் கடனுக்கான மாத தவணையை விட கூடுதலாக இருக்க வேண்டும்.

❖❖❖

# வங்கிகளிலிருந்து பெறும் கடன்கள்

**அடகு கடைக்காரர் போன்று உடனடியாக கடன் தருபவர்கள் அருகில் இருக்கும் பொழுது ஏன் வங்கியில் கடன் வாங்க வேண்டும் ?**

வங்கியில் கடன் கிடைக்க சிறிது கால தாமதம் ஆனாலும், அடகு கடைக்காரர் மற்றும் வரைமுறைப் படுத்தப்படாத வழியில் கடன் தருபவர்களிடம் வாங்குவதை விட, வங்கியில் கடன் வாங்குவது சிறந்ததாகும். வங்கி, நம்பகத்தன்மை, பாதுகாப்பு, மற்றும் ஒளிவு மறைவற்ற வகைகளில், சிறந்த முறையில் நமக்கு கடன் தரும் ஒரு அமைப்பு ஆகும். வங்கிகள், இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. சிறந்த விஷயம் என்னவென்றால், இவை உங்கள் உறவுக்காரர், அடகு கடைக்காரர், நண்பர்கள், கிராமத்தலைவர் போன்றவர்களை விட மிகக்குறைந்த வட்டியில் உங்களுக்கு கடன் வழங்குகிறது. மற்றும் உங்கள் கடனுக்காக மொத்த ஆவணங்களையும், கடன் வழங்குவதற்கு முன்னரே வங்கி தயார் செய்து விடுகிறது. ஏதேனும் குறை இருப்பின், அதனைச் சரிசெய்ய குறை தீர்க்கும் ஆணையம் உள்ளது.




**வங்கி பரிவர்த்தனைகள் ஒளிவு மறைவற்றவை, வெளிப்படையானவை. வங்கி விதிக்கும் வட்டி குறைவானவை.**

## வங்கிகள் குறை தீர்க்கும் ஆணையம் என்றால் என்ன ?

வங்கிகள் நெறிமுறைப் படுத்தப்பட்டவை. ஒவ்வொரு வங்கியிலும் ஒரு குறை சூர்க்கும் அதிகாரி உள்ளார். அவரைப் பற்றிய விவரங்கள், எல்லா வங்கிக் கிளைகளிலும், மற்றும் வங்கியின் இணையதளத்திலும் வெளியிடப் பட்டிருக்கும். ஏதேனும் குறை இருப்பின் அதனை அவருக்கு எழுதலாம். அவர்களின் முடிவு திருப்தி அளிக்காவிட்டால் இந்திய ரிசர்வ் வங்கியின் குறைசூர்க்கும் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.

## இது போன்ற குறை தீர்க்கும் வழிமுறைகள் நெறிமுறைப் படுத்தப்படாத, கடன் தருபவர்களுக்கும் உள்ளதா?

நெறிமுறைக்கு உட்படாத கடன் தருபவர்களுக்கு எதிராக இது போன்ற குறைசூர்க்கும் வழிமுறைகள் இல்லை. அதனால் தான் கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், குறிப்புகளும், வழிமுறைகளும் இவர்களிடம் தெளிவாக இருக்காது.

## அடகு கடைக்காரரை விட வங்கிகளிடம் கடன் பெற ஏன் கூடுதல் நேரம் ஆகிறது?

வங்கி பொதுமக்களிடம் இருந்து பணத்தை சேர்த்து, அந்த பணத்தை தேவையானவர்களுக்கு கடனாக தருகிறது. பொது மக்கள் பணம் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக, கடன் வாங்கியவர்கள் அந்த பணத்தை ஒழுங்காக உபயோகிக்கிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் வங்கிக்கு உள்ளது. அதனால் கடன் கொடுக்கும் முன்னரே, கடன் திட்டம் சரியாக உள்ளதா என்பதை சூவிரமாக பரிசோதிக்க வேண்டியது அவசியமாகிறது. கடன் முறையாக ஆவணப் படுத்தப்படுவதால், சிறிது கூடுதல் நேரம் ஆனாலும், இது கடன் வாங்குபவர்களுக்கு சாதகமாகவே அமையும். இது வங்கியில் பணத்தை சேமிப்பவர்கள், மற்றும் கடன் பெறுபவர்கள் இருவருக்குமே நன்மை பயக்கும்.



## வங்கி கொடுக்கும் வெவ்வேறு விதமான கடன்கள் யாவை ?

வங்கிகள் வீடுகட்ட, கல்வி, விவசாயம் மற்றும் அதை சார்ந்த பணிகள், தொழில் தொடங்க, நுகர்வோர் கடன் என பலவகையான கடன்களை வழங்கி, அனைத்து கடன் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது.

**உங்கள் தேவைகளை வங்கி நிறைவேற்றும்.**

## வங்கியில் நாம் எப்படி கடன் வாங்குவது ?

கடனுக்கான காரணத்தைக் குறித்து, கடன் விண்ணப்பத்தை நாம் வங்கியில் சமர்பிக்க வேண்டும். வங்கி அனைத்து விவரங்களையும் சரிபார்த்து, நமது திருப்பி செலுத்தும் திறனையும் அளவிட்டு, நமக்கு கடன் கொடுக்கும். அதனை வட்டியுடன் சேர்த்து, வங்கி குறிப்பிட்ட தவணைகளில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும்.

## வங்கியில் வாங்கும் கடனுக்கு ஆகும் கட்டணம் என்ன ?

கடனுக்கான வட்டியே கட்டணம் ஆகும். நாம் செலுத்தும் கடனுக்கான வங்கி வட்டியை புரிந்து கொள்ளுங்கள். வங்கிகள் சாதாரணமாக வட்டியை வருடாந்திர விகிதமாக குறிக்கும் அதாவது 12% என்றால் மாத்திற்கு 1% ஆகும். எவ்வளவு நாட்களில் கூட்டு வட்டி செய்கிறார்கள் என்பதும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மற்ற வரைமுறைக்குட்படுத்தபடாத கடன் தருபவர்களை போல் இல்லாமல், வங்கிகள் தங்கள் வட்டி விகிதம் மற்றும் இதர கட்டணங்களை, தெளிவாக பொதுமக்கள் பார்க்கும் வண்ணம் விளம்பரபடுத்தும். இது அனைவருக்கும் சமமானதாக இருக்கும். வங்கிகள் கடன் வகையினைப் பொருத்து எல்லா வாடிக்கையாளுருக்கும், ஒரே விதமான கட்டணத்தையே வசூலிக்கும், என்பதை பகிரங்கமாக அறிவிக்கும்.

## வாங்கும் கடனுக்கு நாம் ஏதேனும் உத்திரவாதம் தர வேண்டுமா ?

அது கடனையும், அதன் காரணத்தையும் பொருத்தது. பொதுவாக, சிறிய கடன்களுக்கு உத்திரவாதம் கேட்பது இல்லை. ஆனால் பெரிய கடன்களுக்கு சில உத்திரவாதம் நாம் கொடுத்தாக வேண்டும். இது அந்த கடனை பொருத்து, அதனால் நாம் உருவாக்கும் சொத்தாகவோ, அல்லது நிலம், வீடு என வேறு விதமாகவோ இருக்கலாம்.

## கடனை ஏன் நாம் திருப்பி கட்ட வேண்டும் ?

வங்கிகள், மக்கள் சேமிக்கும் பணத்தைத்தான் கடனாகக் கொடுக்கிறது. அதனை நாம் திருப்பி செலுத்தவில்லை என்றால், வங்கிகளின் நிதிநிலைமை மோசம் அடையும். அதனால் வங்கிகளால் மக்கள் சேமித்த பணத்தை குறித்த நேரத்தில் திருப்பி தர இயலாத நிலை உண்டாகும். இப்படி அனைத்து கடனாளிகளும் பணத்தை திருப்பி செலுத்தத் தவறினால், நாம் மற்றும் நமது உறவினர்கள் சேமித்த பணத்திற்கு ஆபத்து வரலாம். நாம் திருப்பிக் கொடுத்த பணத்தை வங்கி இன்னொருவருக்கு கடனாகக் கொடுக்கும், அவரும் பயன்பெறுவார். இறுதியாக நாம் திருப்பி செலுத்தினால் மட்டுமே நமக்கு எதிர்காலத்தில் மேலும் கடன் கிடைக்கும்.

## நாம் வாங்கிய கடனை திருப்பி செலுத்த வில்லை என்றால் என்ன ஆகும் ?

நாம் கடனை திருப்பி செலுத்த தவறினால், நாம் உத்திரவாதமாகக் கொடுத்த சொத்தை, வங்கி தனதாக்கிக் கொள்ள முடியும். மேலும் கடனை வட்டியுடன் திரும்ப பெறுவதற்காக, நம்மேல் சட்டப்படி நடவடிக்கையும் எடுக்க முடியும்.

# குறிப்பு

# குறிப்பு


# குறிப்பு

# இந்திய ரிசர்வ் வங்கி

**மறுதலிப்பு :**

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிஇயல் கல்வியின் முனைப்புகள், சாமான்ய மக்கள் அறிந்து கொள்ளவும், அவர்களை வழிநடத்தவும் நோக்கம் கொண்டது. இதில் கூறப்பட்ட வங்கியியல் சார்ந்த விளக்கங்கள் மக்களின் எளிதான புரிதலுக்காகவே அன்றி, எந்தவித தொழில்நுட்ப மற்றும் சட்ட கோட்பாடுகளுக்கு விளக்கம் கூறவில்லை. இந்த விஷயங்களைப் பயன்படுத்துவோர் தங்களின் கவனத்தையும், சீர்தூக்கலையும் கொண்டு முடிவெடுக்கக் கோருகிறோம். பிழைகள் எதுவுமின்றி அச்சடிக்க முழு முயற்சி எடுக்கப்பட்டிருப்பினும், பிழைகள், தவறுகள், விஷயத்திரிபு ஏதேனும் இருப்பின் அவற்றை எங்கள் கவனதிற்கு கொண்டு வந்தால், அடுத்த பதிப்பு திருத்தங்களுடன் வெளிவரும். இந்த பதிப்பை பயன் படுத்துவதன் மூலம் யாருக்கேனும் ஏற்படும் எவ்வித இழப்பிற்க்கோ, சேதாரத்திற்க்கோ பதிப்பீட்டாளர்கள் எவ்வகையிலும் பொறுப்பேற்கவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

# வங்கிக்கு வாருங்கள், வளமாக வாழுங்கள்




இந்திய ரிசர்வ் வங்கி